# இயல் – 6 முடிவுரை

# முடிவுரை

"விட்டல்ராவ் நாவல்களில் வாழ்வியல் சிக்கல்களும் படைப்பாக்க நெறிமுறைகளும்-ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. அவர் எழுதிய பத்து நாவல்கள் ஆய்வுப்பொருளாக அமைந்தன. அவற்றின் வாயிலாக மனித வாழ்வின் பல்வேறு சிக்கல்கள், அவற்றின் காரணங்கள், கதைமாந்தர்கள், விட்டல்ராவின் படைப்பாக்க நெறிமுறைகள் பற்றி ஆராயப் பட்டன. கண்டறிந்த கருத்துக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

விட்டல்ராவ் எழுத்து உலகிற்கு அறிமுகமானது சிறுகதைப் படைப்பின் மூலம். ஜெயகாந்தன், அசோகமித்திரன் போன்றோரின் படைப்புக்களால் கவரப்பட்டு எழுத்து உலகிற்கு வந்தார். சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள், கட்டுரை எனப் பல்வேறு இலக்கிய வகைகளிலும் தன் படைப்-பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

விட்டல்ராவ் தன் நாவல்களின் மூலமாக மனித வாழ்வின் பல்வேறு சிக்கல்களையும் வெளிப்படுத்தியுள்ளார். மனிதனுக்குச் சிக்கல்கள் குடும்பத்தின் மூலம் ஏற்படுகின்றன; அவன் சார்ந்திருக்கும் தொழில் மற்றும் கலைத்தொடர்பின் காரணமாக ஏற்படுகின்றன. சமுதாய அமைப்பில் இருக்கும் சில கட்டுப்பாடுகள், அரசியல் போன்றவற்றால் ஏற்படுகின்றன. குடும்ப உறவுகளில் கருத்துவேற்றுமை, பொருளாதாரம் போன்றவை சிக்கலைத் தோற்றுவிக்கின்றன. கருத்துவேற்றுமை தீர்க்கப்பட்டால் உறவுகள் சீர்படுகின்றன. பொருளாதாரச் சிக்கல் குடும்பத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் அதிகம். பொருளாதாரத்தைச் சீர் செய்வதிலேயே குடும்பத் தலைவனின் பெரும் வாழ்நாள் கழிகிறது. இறுதிவரை வெற்றியும் கிடைக்காமல் போகின்ற சூழ்நிலையும் ஏற்படலாம்.

பண்பாடு என்பது மனிதனைப் பண்படுத்த சில விதிமுறைக்கோட்பாடுகளைக் கொண்டதாகும். சமுதாயத்தில் ஆண் துணை இல்லாத பெண்களும், விதவைகளும் பண்பாடு வழி நின்று வாழும் நிலையில் பாதுகாப்பற்ற சூழலை உணர்கிறார்கள். பிற ஆடவருடன் தொடர்பு கொண்டு வாழ்கின்ற சூழலில் பாதுகாப்பை உணர்கிறார்கள்; அதில் ஓரளவு அவர்களின் சுயநலமும் அடங்கி இருக்கிறது எனலாம்.

தொழில்துறை மனித வாழ்வில் தனிப்பட்ட முறையிலும், சமுதாய அளவிலும், சிக்கலைத் தோற்றுவிக்கிறது. சமுதாய அளவில் ஏற்படும் தொழில் மாற்றங்களை மனிதர்கள் ஏற்றுக் கொண்டு சூழலுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளும்போது சிக்கல் தவிர்க்கப்படுகிறது; இல்லையெனில் அச்சிக்கல் அவர்களின் வாழ்வையே சிதைக்கிற மாற்றமாக இருக்கிறது.

கலைத்துறையில் ஈடுபட்டுள்ள மனிதர்கள் தங்களது சுயநலம் கருதும் போது அவர்கள் சார்ந்திருக்கின்ற கலைத்துறையில் அவர்களுக்கிடையே சிதைவை ஏற்படுத்துகிறது. கலைத்துறையில் பொருளாதாரம் முக்கியப் பங்கேற்கும் போதும் கலைஞர்கள் சிதைகிறார்கள்.

விட்டல்ராவின் கதைமாந்தர்கள் சமுதாயத்தில் நாம் காணும் நடப்பியல் மாந்தர்களாகவே காட்சி தருகின்றார்கள். தங்கள் நலத்தையே எண்ணி வாழும் சுயநலவாதிகள் சமுதாயத்தில் இருப்பதைப் போலவே, பிறருக்கு உதவி வாழும் நல்ல மனிதர்களையும் நாம் சமுதாயத்தில் காண்கிறோம். அதே சமயத்தில் சமுதாயப் போக்கிற்கேற்ப வாழக் கற்றுக் கொண்டவர்கள், வாழ்வில் பாதுகாப்பைத் தேடுபவர்கள் போன்றோர் விட்டல்ராவின் கதைமாந்தர்களாக வருகின்றனர். வாழ்வில் சில குறிக்கோள்களுடன் வாழும் குறிக்கோள் மாந்தர்கள் சிலரையும் இவரது நாவல்களில் காணமுடிகிறது.

பெண் மாந்தர்களில் சிலர் சமுதாயம் வரையறுக்கும் ஒழுக்கப் பண்புகளை மீறி வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். பண்பாடு காக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழும்போது இவர்கள் துன்பத்துக்கு உள்ளாகிறார்கள்; நியாயமான தேவைகளைக் கட்டுப்படுத்தும் பண்பாடு - மரபுகள் வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்தும்போது இவர்கள் அதை மீறுகின்றனர். இம்மீறல்களைச் சமூகம் வெற்றியடைய விடுவதில்லை. மரபு வழிக்கே திரும்பும் பெண் பாத்திரங்களும் உண்டு; மரபை மீறி பிறருடன் சென்று மகிழ்ச்சியுடன் வாழும் பெண் மாந்தர்களும் உண்டு.

பண்பு - ஒழுக்கம் தவறி வாழும் கோமதநாயகி போன்றோர் சமுதாயத்தால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்கள்; கண்டிக்கப்படுகிறார்கள். பேச்சி போன்ற விதவை மாந்தர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதுண்டு. இவரின் நாவல்களில் பெண்மாந்தர்கள் குறைவாகவே படைக்கப்பட்டுள்ளனர். பெண் பாத்திரங்களில் அனுதாபத்திற்குரிய பாத்திரங்களே அதிகம் எனலாம். இவரின் கதைமாந்தர்கள் சமுதாயத்தில் நடமாடும் சாதாரண மனிதர்களே. தான்கண்டு கேட்டறிந்த மனிதர்களின் வாழ்வையே தன் படைப்புக்களில் இவர் படைத்து உலவ விட்டுள்ளார். தன் படைப்புக்களில் தானும் ஒரு கதைமாந்தராக வருகின்ற உத்தியையும் இவர் கையாண்டுள்ளார்.

விட்டல்ராவ் தன் படைப்பாக்கங்களில் பலவித உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார். பின்னணியைத் தன் நாவல்களில் சிறப்பாகக் கையாண்டுள்ளார். ஒரே பின்னணியை வெவ்வேறு சூழல்களில் வேறுபட்ட நாவல்களில் கையாண்டு பாத்திரப் பண்பு மாற்றத்திற்குப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக, காந்திஜி சுடப்பட்டு அதனால் நேர்ந்த கலவர நிகழ்ச்சிகளை 'நதிமூலம்' 'உனக்குள் இருப்பன் நான்' என்ற இரு நாவல்களிலும் கையாள்கிறார். நதிமூலம் 'கிட்டா'விடம் காந்தியின் மரணமும், பின் நிகழ்ந்த கலவரங்களும் பாதிப்பை

ஏற்படுத்தவில்லை. 'உனக்குள் இருப்பவன் நான்' நாவல் 'அம்பிகைநாதனிடம்' அது பெரும்மாற்றத்தை ஏற்படுத்தி அவன் வாழ்க்கையையே மாற்றி அமைக்கிறது.

விட்டல்ராவின் நாவல்கள் மனித வாழ்வில் சிக்கல்கள் தோன்றும் பலவிதச் சூழல்களையும் சித்தரிக்கின்றன; அவைகளில் வெற்றி அடைந்து, அவன் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படைக் கருத்தையே அவரது நாவல்கள் வலியுறுத்துகின்றன.

<u>எதிர்கால ஆய்வாளருக்கு</u>

விட்டல்ராவின் நாவல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு சூழல்களில் அமைந்திருக்கின்றன. எனவே 'விட்டல்ராவின் நாவல்கள்—ஓர் அமைப்பியல் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளலாம். அவரின் பாத்திரப்படைப்பாக்கத் திறனையும், நெறிமுறைகளையும் கண்டறிய 'விட்டல்ராவ் நாவல்களில் பாத்திரப் படைப்பு' என்னும் தலைப்பிலும் ஆய்வை மேற்கொள்ள இடம் உண்டு. மேலும் 'விட்டல்ராவின் நாவல்களில் கருவும் – கதைப்பின்னலும்' என்னும் தலைப்பிலும் ஆய்வை மேற்கொள்ளலாம்.